தினமணி

**விதைகளை எளிய முறையில் பாதுகாக்கும் விதை கலசங்கள்**

First Published : 20 May 2010 12:00:00 AM IST



பாரம்பரிய விவசாயிகள் தங்களின் விதைகளை பாதுகாக்க உருவாக்கிய விதை கலசங்கள்.

சிதம்பரம்,மே 19: கடந்த சில ஆண்டுகளாக விவசாயத்தில் விதைகள் வர்த்தகம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக உயர் விளைச்சல் ரகங்கள், ஒட்டு ரகங்கள் அதிக விலையில் வேளாண் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு விவசாயிகளின் சாகுபடிச் செலவுகளை அதிகரிக்கச் செய்கிறது.

இத்தகைய நடைமுறைச் சூழலில் குறைந்த செலவில் வேளாண் சாகுபடிப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் நமது பாரம்பரிய விதைகளை பாதுகாக்கவும் விதைக் கலசங்கள் பெரிதும் உதவி செய்கின்றன.

பயன்பாட்டு முறைகள்: பல்லாண்டுகளாக தமிழக கிராமங்களில் விதைகளை மண் பானைகளில் பாதுகாக்கும் முறையே தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

இருப்பினும் விவசாயிகள் பல சிறு தானிய மற்றும் பயிர் வகைகளை எளிதான முறையில் நீண்ட காலத்துக்கு தொடர்ச்சியாக பாதுகாக்க விதைக் கலசங்களை பல முன்னோடி முற்போக்கு பாரம்பரிய விவசாயிகள் உருவாக்கி வெற்றிகரமாக குறைந்த செலவில் தங்களின் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த புதிய விதை பாதுகாப்பு முறையில் விவசாயிகள் தங்களின் விதைத் தேவை, நிலத்தின் அளவு, சாகுபடி செய்யப்படும் பயிர்களை அடிப்படையாகக் கொண்டு விதைத் கலசங்களை தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாரம்பரிய குயவர்களின் உதவியுடன் உருவாக்கப்படும் உறுதியான மண் கலசங்கள் நன்றாக சுத்தப்படுத்தி வெய்யிலில் காய வைக்கப்படுகிறது. பின்னர் விதைகளை நன்றாக சுத்தப்படுத்தி, அரிப்புகள் கொண்டு களை விதைகள், இதர வேளாண் கழிவுகளை அப்புறப்படுத்திவிட்டு வேம்பு, நொச்சி மற்றும் தங்கள் பகுதியில் கிடைக்கும் மருத்துவ குணமுள்ள மூலிகை இலைகள், சிறிய துண்டுகளாக மஞ்சள் கலக்கப்பட்டு பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

பின்னர் விதைகள் பானைகளில் உள்ள தடுப்புகளில் வைத்து தனித்தனியாக நீண்ட காலத்துக்கு பாதுகாக்கப்படுகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒரு விதைக் கலசத்தைச் கொண்டே பல ரக விதைகள், பல பயிர்களின் விதைகளை எதிர்கால தேவைக்கு எளிதாக பாதுகாக்க முடியும்.
பெரிய விவசாயிகள் தங்களின் சாகுபடி தேவை மற்றும் எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு பெரிய அளவு விதை கலசங்களில் அதிகளவில் விதைகளை சேகரித்து எளிதாக பயன்படுத்தி அதிகளவு பொருளாதார லாபங்களை பெற முடியும்.


சிறு தானிய விதைகள், தீவனப் பயிர்களின் விதைகள், மூலிகைப் பயிர்களின் விதைகள், காய்கறி விதைகளையும் நீண்ட காலத்துக்கு எளிதாக பாதுகாக்க முடியும்.

பிற பயன்கள்: விதைக் கலசங்களைக் கொண்டு தமிழக விவசாயிகள் நீண்ட காலத்துக்கு விதைகளை பாதுகாத்து, குறைந்த செலவில் வேளாண் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு அதிக லாபம் பெற முடியும்.
பாரம்பரிய விதைகளுக்கு அதிகளவு வர்த்தக வாய்ப்புகள் உள்ள நிலையில் நமது விவசாயிகள் விதைக் கலசங்கள் வாயிலாக விதைகளை பாதுகாத்து விதை வர்த்தகம் மற்றும் வணிகத்தில் நல்ல வருமானம் பெறலாம்.
சிறு மற்றும் குறு விவசாயிகள், பண்ணை மகளிர், சுயஉதவிக் குழுவினர் குறைந்த செலவில் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு, சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாமல் வேளாண் பணிகளை மேற்கொள்ள இந்த விதைக் கலசங்கள் பெரிதும் உதவியாக இருக்கும்.

எனவே குறைந்த செலவில் அதிக லாபம் பெறவும், நமது பாரம்பரியமிக்க விதைச் செல்வங்களை பாதுகாக்க உதவும் விதைக் கலசங்களை பயன்படுத்தி தமிழக விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்கிறார் அண்ணாமலைப் பல்கலை. வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

**கூன் வண்டை அழித்து தென்னையைப் பாதுகாக்க புதிய தொழில்நுட்பம்**

First Published : 20 May 2010 12:00:00 AM IST



1. கூன் வண்டை அழிக்கும் பக்கெட் வடிவிலான பொறி. 2. பொறியின் உள் பகுதி. 3. கூன் வண்டை உருவாக்கும் புழு.

புதுச்சேரி, மே 19: தென்னையைத் தாக்கி உற்பத்தியை குறைக்கும் சிவப்பு கூன் வண்டுகளை புதிய தொழில்நுட்பத்தின் மூலம் அழிக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
தோப்பு பயிரான தென்னை, பலரது வீடுகளிலும் வளர்க்கப்படுகிறது. 10 முதல் 15 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக தேங்காய் தரும் கற்பக விருட்சமாக தென்னை விளங்குகிறது.

தென்னையில் குட்டை, நெட்டை, யாழ்ப்பாணம் என்று 3 ரகங்கள் உள்ளன. தென்னை மரத்தில் வரிக்கோடுகள் இருக்கும். ஒவ்வொரு வரிக் கோடும் ஒரு வயதைக் குறிக்கும். ஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் குறுகிய கால பயிர்களை தவிர்க்கும் விவசாயிகள் தென்னை போன்ற தோப்பு பயிர்களுக்குத் தாவுகின்றனர். ஆனால்,தோப்பு பயிர்களில் நோய்த் தாக்குதல் ஏற்பட்டு மகசூல் குறையும்பட்சத்தில் மரத்தைப் பிடிங்கிப் போட முடியாது. எனவே, நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கையாண்டு முன்னெச்சரிக்கையுடன் வளர்க்க வேண்டும்.

ஆண்டுக்கு 2 முறை: தென்னைக்கு ஆண்டுக்கு 2 முறை உரம் இட வேண்டும். ஆடி மாதம், தை அல்லது மாசி மாதம் உரம் இடுவது சிறப்பானது.
ஒரு மரத்துக்கு 1 கிலோ யூரியா, 2 கிலோ பொட்டாஷ் கண்டிப்பாக இட வேண்டும். இத்துடன் ஒரு மரத்துக்கு 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு வைக்க வேண்டும்.

இதனுடன் ஒரு மரத்துக்கு 25 கிலோ மக்கிய தொழு உரம் இடுவதும் அவசியம். கணக்கிடப்பட்ட உரத்தின் ஒரு பகுதியை ஓர் அரை வட்டத்துக்குள் இட வேண்டும். மறுமுறை உரமிடும் போது மீதமுள்ள அரைவட்ட பகுதியில் உரத்தை இட வேண்டும்.

ஒரு மரத்துக்கு 200 கிராம் போராக்ஸ் நுண்ணூட்டச் சத்து உரமிடுவதன் மூலம் குறும்பை உதிருதல், பூ கொட்டுதல் போன்றவற்றை தடுக்கலாம். இதன்மூலம் நன்றாக குலை தள்ளுவதோடு, தேங்காய்களும் திரட்சியாக இருக்கும்.
200 முட்டைகள்: தென்னையை தாக்கி சேதம் ஏற்படுத்துவதில் முக்கியமானவை சிவப்பு கூன் வண்டுகள். தென்னை மரத்தின் தண்டுப் பகுதியில் ஏற்படும் துளைகளின் வழியாக ஜோடி, ஜோடியாக கூன் வண்டுகள் உள்ளே புகுந்துவிடுகின்றன.

இதில் ஒரு ஜோடி 200 முட்டை இடும். அவற்றிலிருந்து மேலும் 200 வண்டு வெளியே வரும். இவை மரத்தின் உள்ளே இருக்கும் சத்தை சாப்பிட்டு சக்கையைத் துளை வழியாக வெளியே தள்ளும்.
அது பிசின் போன்று இருக்கும். இதனால் மரம் பலவீனம் அடையும். காற்று அடித்தாலும் இந்த மரம் விழுந்துவிடும். 1980-ம் ஆண்டிலிருந்து சிவப்பு கூன் வண்டை ஒழிக்க பல விதமான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மரத்தின் தண்டு பகுதியில் ஊசி போடுதல், மோனோ புரோட்டோபாப்ஸ வேர் பகுதியில் கட்டிவிடுவது போன்றவை அடங்கும். அவையெல்லாம் வெற்றிக்கரமாக அமையவில்லை.

இனக் கவர்ச்சி பொறி: இந்நிலையில் புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் துறையின் நிபுணர் என். விஜயகுமார், சிவப்பு கூன் வண்டுகளை அழிக்கும் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளார். தென்னையைத் தாக்கும் சிவப்புக் கூன் வண்டுகளைக் கவர்ந்து இழுத்து அழிக்கக் கூடிய இனக் கவர்ச்சி பொறி உருவாக்கப்பட்டுள்ளது.சுமார் 20 கிராமங்களில் உள்ள தென்னையில் நடத்திய ஆய்வின் பயனாக இந்த இனக்கவர்ச்சி பொறியில் சிறப்பம்சங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதனை உருவாக்கும் முறைகள் குறித்து கூறப்படுவது: ஒரு பக்கெட்டில் 1 கிலோ அன்னாச்சி பழத்தை நறுக்கிப் போட வேண்டும். அத்துடன் 1 லிட்டர் சுத்தமான தென்னங் கள் ஊற்ற வேண்டும். அத்துடன் 25 கிராம் ஈஸ்ட் மாத்திரையை போட வேண்டும்.

தண்ணீரை ஊற்றி கலக்கும் போது நொதிப்புத் தன்மை காரணமாக நொதி வெளியே வரும். அந்த பக்கெட் மேல் மூடியில் ஆண், பெண் கூன் வண்டில் இருந்து எடுக்கப்பட்ட ஹார்மோன்களைப் பொருத்த வேண்டும். இந்தப்

பக்கெட்டை மூடிவிட்டு ஒரு கயிறு கொண்டு 5 ஏக்கர் தென்னந்தோப்பின் நடுவில் 4 அடி உயரத்தில் ஒரு மரத்தில் கட்டிவிட வேண்டும்.

இவ்வாறு செய்யும் போது சிவப்பு கூன் வண்டு தென்னை மரத்துக்குச் செல்லாமல் ஹார்மோன் வாசனைக்கு பக்கெட் மாதிரியான இந்த இனக்கவர்ச்சி பொறியில் வந்து வீழ்ந்துவிடும். நொதிப்பில் மயங்கம் அடைந்து செத்துவிடும். சுற்றுச்சூழலைப் பாதிக்காத இந்தக் கருவி, 5 ஏக்கருக்கு ஒன்று போதுமானது. ஓர் ஏக்கரில் 80 மரங்கள் இருக்கும். மொத்தம் 400 மரங்களுக்கு ஒரு பக்கெட் போதுமானது.  விலையும் குறைவு.

இந்தப் பொறி காமராஜர் வேளாண் நிலையத்தில் ரூ.400-க்கு கிடைக்கிறது. இந்த ஒரு பொறி 8  மாதம் வேலை செய்யும்.
மற்ற தொழில்நுட்பங்கள் மூலம் தென்னையைப் பாரமரிப்பது அதிகமான செலவாகும். இது எளிமையான தொழில்நுட்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

**கிலோ பிச்சி பூ ரூ.750**
First Published : 19 May 2010 12:35:43 PM IST

நாகர்கோவில், மே 18:தோவாளை பூ சந்தையில் செவ்வாய்க்கிழமை ஒரு கிலோ பிச்சி பூ ரூ.750-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதுபோல் சம்பங்கி, மல்லிகை, அரளி பூக்களின் விலையும் உயர்ந்திருந்தது.
புதன்கிழமை திருமண முகூர்த்தம் என்பதால் இந்த விலை உயர்வு காணப்பட்டதாக பூ வியாபாரி மூர்த்தி தெரிவித்தார்.
தோவாளை பூ சந்தையில் சில பூக்களின் விலை ஒரு கிலோவுக்கு விவரம்அடைப்புக்குள் கடந்த வார விலை): சம்பங்கி- ரூ.200 (ரூ.100), மல்லிகை- ரூ.200 (ரூ.75), பிச்சி- ரூ.750 (ரூ.300), அரளி- ரூ.120 (ரூ.75), ரோஜா (100 எண்ணம்)- ரூ.30 (ரூ.25).

**கொள்முதல் குறைந்தது: சென்னைக்கு இன்று பால் அனுப்பப்படுமா?**
First Published : 19 May 2010 11:46:40 AM IST

சேலம், மே 18:  சேலம் மாவட்டத்தில் பால் கொள்முதல் குறைந்ததால் சென்னைக்கு புதன்கிழமை பால் அனுப்பப்படுவது கேள்விக்குறியாகி உள்ளது.
பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் திங்கள்கிழமை முதல் பால் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் கறவை மாடுகள் வைத்துள்ளவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்காமல் தவிர்த்து வருகின்றனர். சேலம், நாமக்கல் மாவட்டத்தில் உற்பத்தியாளர்களிடம் இருந்து சேகரிக்கப்படும் பால், சேலம் ஆவினுக்கு கொண்டு வரப்படுகிறது. தமிழகத்திலேயே சேலம் ஆவினுக்குதான் அதிகளவில் (சுமார் 4 லட்சம் லிட்டர்) பால் சேகரம் ஆகிறது. போராட்டத்தின் முதல் நாளில் சுமார் 50 சதவீதம் அளவுக்கு அதாவது சுமார் 2 லட்சம் லிட்டர் அளவுக்கு பால் சேகரிக்கப்படுவது குறைந்தது. சேலம் ஆவின் மூலம் சேகரிக்கப்படும் பாலில் சுமார் ஒரு லட்சம் லிட்டர் உள்ளூர் தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. மீதம் உள்ளது சென்னை மக்களின் பால் தேவையை பூர்த்தி செய்வதற்காக அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பால் உற்பத்தியாளர்களின் போராட்டத்தை அடுத்து சென்னைக்கு செல்லும் பாலின் அளவு செவ்வாய்க்கிழமை குறைந்துள்ளது. அதாவது குறைந்தது 3 டேங்கர் லாரிகளில் பால் கொண்டு செல்லப்படவில்லை. ஒரு நாளில் மட்டும் 36 ஆயிரம் லிட்டர் பால் சென்னைக்கு அனுப்பப்படவில்லை. ஏற்கெனவே இருப்பு வைக்கப்பட்டிருந்த பாலைக் கொண்டே செவ்வாய்க்கிழமை தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சேலம் ஆவினுக்கு செவ்வாய்க்கிழமை 60 சதவீதம் பால் வரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் உள்ளூர் ஆவின் பால் விற்பனை முகவர்களுக்கு சுமார் 22 ஆயிரம் லிட்டர் பால் குறைவாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது. சேலம், நாமக்கல் மாவட்டங்களில் சுமார் 550 ஆவின் பால் விற்பனை முகவர்கள் உள்ளனர். இவர்களுக்கு சராசரியாக 40 லிட்டர் வரை பால் குறைத்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையின் தேவையை ஓரளவுக்கேனும் ஈடுகட்டுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சென்னையின் தேவைக்கு புதன்கிழமையும் பால் அனுப்பப்படுமானால் உள்ளூரில் ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே பால் வரத்து குறித்து சேலம் ஆவின் மேலாண் இயக்குநர் ராஜரத்தினம் கூறும்போது, சேலம் ஆவினுக்கு நாள்தோறும் 4 லட்சம் லிட்டர் பால் வந்து கொண்டிருப்பதாகவும், பால் உற்பத்தியாளர்களின் போராட்டம் காரணமாக காலை, மாலை வேளைகளில் தலா சுமார் 20 ஆயிரம் லிட்டர் வரையே பால் கொள்முதல் குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**"ஆலோசனை வழங்க விவசாயிகளை தேடி வரும் வேளாண் அலுவலர்கள்'**

First Published : 19 May 2010 12:30:13 PM IST

தஞ்சாவூர், மே 18: தஞ்சை வட்டத்தில் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க, அவர்களைத் தேடி வருகிறார்கள் வேளாண் அலுவலர்கள் எனத் தெரிவித்தார் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தஞ்சாவூர் வட்டார உதவி வேளாண் இயக்குநரின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் உதவி வேளாண் அலுவலர்களின் நிரந்தர பயணத் திட்டம் இரு வாரங்களுக்கு ஒரு முறை சுழற்சியில் வரும் பயணத் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒவவொரு உதவி வேளாண் அலுவலரும் முதல் மற்றும் 3-வது வாரம் சில கிராமங்களுக்கும் 2-வது மற்றும் 4-வது வாரம் சில கிராமங்களுக்கும் நேரடியாக சென்று ஆலோசனை வழங்குவார்கள்.

தஞ்சாவூர் உதவி வேளாண் அலுவலர் முதல் மற்றும் 3-வது வாரத்தில் திங்கள்கிழமை பிள்ளையார் நத்தம், சீராளூர், செவ்வாய்க்கிழமை சக்கரசாமந்தம், மேலவெளி, புதன்கிழமை பள்ளியேறி, கரந்தை, வெள்ளிக்கிழமை ஆவுசாகிப்தோட்டம், மேல சித்தர்காடு பகுதியில் ஆலோசனை வழங்குவார்.

சூரக்கோட்டை உதவி வேளாண் அலுவலர் திங்கள்கிழமை சூரக்கோட்டை, செவவாய்க் கிழமை மடிகை, காட்டுர், புதன்கிழமை காசநாடுபுதூர், கண்டிதம்பட்டு, வெள்ளிக் கிழமை குளிச்சப்பட்டு, வாளமரக்கோட்டை பகுதிதியில் ஆலோசனை வழங்குவார்.

ராமாபுரம் உதவி வேளாண் அலுவலர் திங்கள்கிழமை ராமாபுரம், செவ்வாய்க்கிழமை நரசநாயகிபுரம், புதன்கிழமை தோட்டக்காடு, வெள்ளிக்கிழமை கொண்டவிட்டான்திடல் பகுதியிலும், ராஜேந்திரம் உதவி வேளாண் அலுவலர் திங்கள்கிழமை ராஜேந்திரம் செவ்வாய்க்கிழமை மனக்கரம்பை, புதன்கிழமை பள்ளியக்ரஹாரம், வெள்ளக்கிழமை

வேலூர், வலம்புரி பகுதியிலும், ஆலக்குடி வேளாண் அலுவலர் திங்கள்கிழமை ஆலக்குடி, செவ்வாய்க்கிழமை வண்ணாரப்பேட்டை, புதன்கிழமை கல்விராயன் பேட்டை, வெள்ளிக்கிழமை ராமநாதபுரம் பகுதியிலும், வல்லம் உதவி வேலஆம்மை அலுவலர் திங்கள்கிழமை வல்லம் வடக்கு, தெற்கு, செவ்வாய்க்கிழமை குருவாடிப் பட்டி, புதன்கிழமை பிள்ளையார்பட்டி, வெள்ளிக்கிழமை சென்னம்பட்டி பகுதிகளில் ஆலோசனை வழங்குகின்றனர்.

2 மற்றும் 4-வது வாரத்தில் தஞ்சாவூர் அலுவலர் திங்கள்கிழமை பின்னைநல்லூர், புளியந்தோப்பு, செவ்வாய்க்கிழமை புதுப்பட்டினம், புதன்கிழமை கீரைக்கொல்லை, வெள்ளி டவுன்கரம்பை, சூரக்கோட்டை அலுவலர் திங்கள்கிழமை விளார், கொல்லாங் கரை, செவ்வாய்க்கிழமை மருங்குளம், இனாத்துக்கான்பட்டி, புதன்கிழமை நா வல்லுண்டான்பட்டு, வெள்ளிக்கிழமை கொ வல்லுண்டான்பட்டு, நாஞ்சிக்கோட்டை, ராமாபுரம் அலுவலர் திங்கள்கிழமை திருவேதிக்குடி, திட்டை, செவ்வாய்க்கிழமை மாத்தூர், நல்லிச்சேரி, புதன்கிழமை குருங்களூர், கூடலூர், வெள்ளிக்கிழமை தண்டாங்கோரை, மானாங்கோரை பகுதியில் ஆலோசனை வழங்குவார்கள்.

ராஜேந்திரம் அலுவலர் திங்கள்கிழமை நாகத்தி,செவ்வாய்க்கிவமை தென்பெரம்பூர், புதன்கிழமை கள்ளப்பெரம்பூர் 1, 2, வெள்ளிக்கிழமை ராயந்தூர், ஆலக்குடி அலுவலர் திங்கள்கிழமை சித்தி6ரக்குடி செவ்வாய்க்கிழமை மருதக்குடி, திருவேங்கடஉடையான் பட்டி, புதன்கிழமை அய்யாசாமிபட்டி, மாதுராண் புதுக்கோட்டை, வெள்ளிக்கிழமை திருமலைச்சமுத்திரம், வல்லம் அலுவலர் திங்கள்கிழமை வல்லம்புதூர், செவ்வாய்க்கிழமை திருக்கானூர்பட்டி, புதன்கிழமை குருங்குளம் மேற்கு, வெள்ளிக்கிழமை குருங்குளம் கிழக்கு ஆகிய பகுதிகளில் ஆலோசனை வழங்குகின்றனர்.

மேற்கண்ட பகுதிகளுக்கு குறிப்பிட்ட நாளில் வரும் அலுவலர்கள் கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மையங்களுக்கு வந்து சாகுபடி செய்யும் முறைகள், நல்ல விதைகள் எங்கு கிடைக்கும், எந்த பருவத்தில் எந்த பயிர் சாகுபடி செய்வது, இடுபொருள்கள் இடுவது உள்ளிட்ட ஆலோசனைகள் வழங்குவார்கள். விவசாயிகளும் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை கேட்டறிந்து கொள்ளலாம்.

உதவி வேளாண் அலுவலர்கள் கிராமங்களுக்கு சென்று குறைகளை கேட்டறிவதில்லை என்று விவசாயிகள் தெரிவித்தன் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் செம்மை நெல் சாகுபடி முறையை அதிகப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும்.

**10 விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க கடனுதவி**

First Published : 19 May 2010 01:05:36 PM IST

திருவண்ணாமலை, மே 18:சொரகொளத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க கடனுதவி வழங்கும் விழா வெளுகானந்தல் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கோதாவரி பாலிமர் நிறுவனம் சார்பில் 15.1 ஏக்கரில் 10 விவசாயிகள் மூலம் கரும்பு, கத்திரி, வெண்டை காய்கறி பயிரிடும் வகையில் துல்லிய சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ரூ.3.4 லட்சம் கடனுதவிக்கான காசோலையை மண்டல இணைப் பதிவாளர் ச.சுப்பிரமணியன் வழங்கினார்.

மத்திய கூட்டுறவு வங்கி பொதுமேலாளர் பி.சுந்தரேசன், களஅலுவலர் எஸ்.முத்துசாமி, தனி அலுவலர் சி.மீனாட்சிசுந்தரம், செயலர் ஏ.சாமியார், தோட்டக்கலை அலுவலர் நாராயணசாமி, கோதாவரி நிறுவன அலுவலர் சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**லைலா புயல்: கன மழையால் வட தமிழகம் பாதிப்பு**

First Published : 20 May 2010 01:21:01 AM IST

Last Updated : 20 May 2010 01:29:33 AM IST



"லைலா' புயல் சின்னம் காரணமாக புதுச்சேரியில் புதன்கிழமை அதிக சீற்றத்துடன் காணப்பட்ட கடல்.

சென்னை, மே 19: லைலா புயல் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் புதன்கிழமை ஒரே நாளில் அதிகபட்சமாக 108 மி.மீ. மழை பதிவானது.

சென்னை அருகே வங்கக்கடலில் மையம் கொண்டுள்ள லைலா புயல், வியாழக்கிழமை மதியம் ஆந்திர கடற்கரை அருகே கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புயல் கரையைக் கடக்கும்போது, வடக்கு தமிழக கடற்கரை பகுதியில் அதிகபட்சமாக 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

சென்னை உள்பட பல நகரங்களில் சாலைகளில் வெள்ளம் புகுந்ததோடு, மரங்களும் சரிந்து விழுந்ததால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. சூறாவளிக் காற்று காரணமாக கடற்கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏராளமான மீன்பிடி படகுகள் கடும் சேதம் அடைந்ததால், மீனவர்களுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வங்கக் கடலில் சென்னைக்கு அருகில் நிலைகொண்டுள்ள புயல் காரணமாக, சென்னை உள்பட தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் மழை பெய்து வருகிறது. மேலும் இரண்டு தினங்களுக்கு பலத்த மழை நீடிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

5 பேர் சாவு: தொடர் மழைக்கு சென்னை உள்பட தமிழகத்தில் 5 பேர் உயிரிழந்தனர். சென்னையில் சாலையில் அறுந்து விழுந்துகிடந்த மின்சார வயரை மிதித்த பெண் கம்ப்யூட்டர் என்ஜினியர் பரிதாபமாக உயிரிழந்தார்.

படகுகள் சேதம்: லைலா புயலால் வீசிய சூறாவளிக் காற்றுக்கு ராமேசுவரம் மண்டபம் மற்றும் பாம்பன் பகுதிகளில் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 46 நாட்டுப் படகுகளும், 40 விசைப் படகுகளும் பலத்த சேதமடைந்தன. இதனால் ரூ. 20 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

போக்குவரத்து பாதிப்பு: பலத்த காற்றுடன் வீசிய மழை காரணமாக சென்னை உள்பட தமிழகத்தின் பல நகரங்களில் சாலை போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. சென்னையில் பல சாலைகளில் வெள்ளம் புகுந்ததோடு, 70-க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு பெயர்ந்து விழுந்தன. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு செல்லும் பஸ்கள் 5 மணி நேரத்துக்கும் மேல் தாமதமாகச் சென்றன. இதுபோல் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல பகுதிகள் இருளில் மூழ்கின.
மேலும் இரண்டு தினங்களுக்கு மழை: புயல் கரையைக் கடக்கும்போது, ஆந்திர கடற்கரையில் 60 முதல் 75 கி.மீ. வேகத்தில் சூறைக் காற்று வீசக் கூடும். வடக்கு தமிழகம் கடற்கரை பகுதிகளில் 55 முதல் 60 கி.மீ. வேகத்தில் சூறைக் காற்று வீசும். தமிழகம் மற்றும் புதுவையில் கன மழை நீடிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னையில் 108 மி.மீ. மழை: சென்னையில் புதன்கிழமை ஒரே நாளில் 108 மி.மீ. மழை பதிவானது. புதன்கிழமை காலை 8.30 மணி வரை தொழுதூரில் 90 மி.மீ., திருவாரூர், முசிறி பகுதிகளில் 70 மி.மீ., வேதாரண்யம், சாத்தனூர் அணை, தாம்பரம், பாபநாசம், தஞ்சாவூர், நன்னிலம், ஆலங்குடி, தம்மம்பட்டி, சீராழ் பகுதிகளில் 50 மி.மீ. மழை பதிவானது.

தினமலர்

**வனப்பகுதியில் குப்பையை தடுக்க சுற்றுலாப் பயணிகளுக்கு துணிப்பை**

பொள்ளாச்சி : டாப்சிலிப் செல்லும் சுற்றுலா பயணிகள் வனப்பகுதிகளில் பிளாஸ்டிக் குப்பைகளை வீசியெறிவதை தடுக்க, சேத்துமடை செக்போஸ்ட்டில் துணிப்பை சப்ளை செய்யப்படுகிறது.பொள்ளாச்சி அடுத்த டாப்சிலிப் வனப்பகுதிக்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகின்றனர். வனப்பகுதிக்குள் சுற்றுலா பயணிகள் செல்வதற்கு கடந்த 20 நாட்களாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெளியூர்களில் இருந்து கோடை விடுமுறையில் சுற்றுலா வருபவர்கள் பிளாஸ்டிக் கவர்களில் திண்பண்டங்களையும், பிளாஸ்டிக் பாட்டில்களில் குடிநீரும் கொண்டு வருகின்றனர்.கொண்டு செல்லும் உணவு பொருட்கள் காலியானதும் பிளாஸ்டிக் கவர் மற்றும் தண்ணீர் பாட்டில்களை வனப்பகுதியில் ரோட்டோரத்தில் வீசியெறிகின்றனர். வனத்தினுள் பிளாஸ்டிக் பொருட்கள் கிடப்பதால் வனஉயிரினங்களுக்கு ஆபத்து உள்ளதால், வனத்தினுள் பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வெளியூர்களில் இருந்து உணவு பொருட்களை பிளாஸ்டிக் கவர்களில் வைத்து கொண்டு வருவதால் வனத்துறையினர் தடுக்க முடியாமல் அவதிப்பட்டனர். பிளாஸ்டிக் பொருட்களை வனத்தினுள் கொண்டு செல்வதை தடுக்க முடியாவிட்டால், அவற்றை வனத்தினுள் வீசியெறிவதை தடுக்க வேண்டும் என்று வனத்துறையினர் திட்டமிட்டனர்.

உயர் அதிகாரிகள் ஆலோசனைக்கு பிறகு, டாப்சிலிப் செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு துணிப்பை கொடுத்தனுப்பி பிளாஸ்டிக் குப்பைகளை திரும்ப பெறும் திட்டத்தை ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குனர் பசவராஜு அறிவித்துள்ளார்.அதன்படி, டாப்சிலிப் செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு சேத்துமடை செக்போஸ்ட்டில் நேற்று முதல் துணிப்பைகள் வழங்கப்படுகிறது. பொள்ளாச்சி வனச்சரக அலுவலர் வீரமணி தலைமையில் வனத்துறையினர் சுற்றுலா பயணிகளுக்கு துணிப்பைகளை வழங்குகின்றனர்

.வனச்சரக அலுவலர் வீரமணி கூறியதாவது: வனப்பகுதிக்குள் பிளாஸ்டிக் கவர், பாட்டில்கள், மதுவகைகள், பீடி, சிகரெட் மற்றும் தீப்பெட்டி கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் கவர் பயன்பாட்டை தடுக்க முடியாததால் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.டாப்சிலிப் செல்லும் சுற்றுலா பயணிகளிடம் சேத்துமடை செக்போஸ்டில் 30 ரூபாய் வசூலித்துக்கொண்டு துணிப்பை வழங்கப்படுகிறது. அவர்கள் கொண்டு செல்லும் பிளாஸ்டிக் கவர்கள், தண்ணீர் பாட்டில்களை பயன்பாட்டிற்கு பிறகு துணிப்பையில் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

வனப்பகுதியில் இருந்து வெளியேறும் போது சேத்துமடை செக்போஸ்டில் பிளாஸ்டிக் குப்பையுடன் கூடிய துணிப்பையை ஒப்படைக்க வேண்டும். அவர்களிடம் வசூலிக்கப்பட்ட தொகையில் 5 ரூபாய் பராமரிப்புக்காக பிடித்தம் செய்து கொண்டு 25 ரூபாய் திரும்ப ஒப்படைக்கப்படும்.சுற்றுலா பயணிகளிடம் இருந்து சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் குப்பையை வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி நிர்வாகத்தினர் சேகரித்து கொள்கின்றனர். இந்த திட்டத்திற்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.
இவ்வாறு, வனச்சரக அலுவலர் வீரமணி தெரிவித்தார்.

**விதைப்பு முதல் அறுவடை வரை பருத்தியில் இயந்திரம் அவசியம் : வேளாண் பல்கலை துணைவேந்தர் பேச்சு**

கோவை : "தொழிலாளர் பற்றாக்குறையால், பருத்தியில் விதைப்பது முதல் அறுவடை வரை அனைத்து பணிகளையும் இயந்திரமயமாக்க முயற்சி மேற்கொள்வது அவசியம்," என, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.பருத்தி ஆண்டு ஆராய்ச்சிக்கூட்டம், தமிழ்நாடு வேளாண் பல்கலை வளாகத்தில் நடந்தது.

பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது:இந்தியாவில் 3,040 பஞ்சாலைகள், 40 லட்சம் கைத்தறி ஆலைகள், 17 லட்சம் பவர்லூம்கள் மற்றும் பனியன் தொழிற்சாலைகளில் 3.5 கோடி தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 1,900 பஞ்சாலைகள் உள்ளன. தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டம் மற்றும் ஒட்டுரக பருத்தி அறிமுகப்படுத்தப்பட்டதால், பருத்தியின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது. 2002ல் அறிமுகப்படுத்தப்பட்ட 'பிடி  பருத்தி மூலம் மேலும் இது அதிகரித்துள்ளது. சர்வதேச பருத்தி உற்பத்தியில் 16 சதவீதம் (2.9 கோடி பேல்கள்) இந்தியாவில் உற்பத்தியாகிறது. சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

அமெரிக்காவில் உயிரி எரிபொருள் உற்பத்திக்காக மக்காச் சோளம் பயிரிடுவது அதிகரித்துள்ளதால் மூன்று கோடி பேல்களாக இருந்த பருத்தி உற்பத்தி, 1.5 கோடி பேல்களாக குறைந்துள்ளது. எனவே, இந்திய பருத்தி ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்பு உள்ளது; அதிக வருவாய் ஈட்ட முடியும். தற்போது 60 சதவீதம் முதல் 70 சதவீத பருத்தி பரப்பளவு மானாவாரியாக பயிரிடப்படுகிறது. மானாவாரியில் அதிக மகசூல் தரும் பருத்தி ரகத்தை உருவாக்க ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். தனியார் விதை உற்பத்தியாளர்கள் 'பிடி' ஒட்டுரக பருத்தியை மட்டும் உருவாக்குவதால், விவசாயிகள் மீண்டும் விதையை உபயோகப்படுத்த முடிவதில்லை.  விஞ்ஞானிகள் 'பிடி' மரபணுவை தமிழகத்தில் பரவலாக பயிரிடப்படும் எம்.சி.யூ., மற்றும் எஸ்.வி.பி.ஆர்., ரகங்களில் உட்புகுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இத்துடன், தற்போது தொழிலாளர் பற்றாக்குறை இருப்பதால், வேளாண் பொறியியல் துறை மூலம் பருத்தியில் விதைப்பது முதல் அறுவடை வரை அனைத்து பணிகளையும் இயந்திரமயமாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம்.இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

'தமிழகத்தின் பருத்தி பொருளாதாரம்' குறித்து, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மைய இயக்குனர் அஜ்ஜன் பேசியதாவது:சர்வதேச பருத்தி பரப்பளவில் இந்தியா முதலிடமும், உற்பத்தியில் இரண்டாமிடமும், உற்பத்தித்திறனில் ஐந்தாமிடமும் வகிக்கிறது. இந்தியாவில் பருத்தி உற்பத்தி திறன் எக்டருக்கு 186 கிலோவிலிருந்து 523 கிலோவாக

உயர்ந்துள்ள போதும், சர்வதேச அளவில் சராசரி உற்பத்தித் திறனான 761 கிலோவை காட்டிலும் எக்டருக்கு 238 கிலோ மகசூல் குறைவாக உள்ளது.நம்நாட்டில் உபயோகப்படுத்தப்படும் பருத்தியில் 43 முதல் 45 சதவீதம் வரை தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகள் பயன்படுத்துகின்றன.

தமிழ்நாட்டில் 1980-81ல் 2.15 லட்சம் எக்டராக இருந்த பருத்தி பரப்பளவு, 2009-10ல் 87 ஆயிரமாக குறைந்துள்ளது. எனவே, பருத்தி பரப் பளவை குறிப்பாக மிக நீண்ட இழைப் பருத்தி ரக பரப்பளவை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இத்துடன் உற்பத்தி செலவை குறைக்க இயந்திரமயமாக்கல் செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். பல்கலை ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, பருத்தித்துறை தலைவர் ராஜரத்தினம், உழவியல் துறை பேராசிரியர் ராஜேந்திரன், பூச்சியியல் துறை பேராசிரியர் மோகன் உள்ளிட்ட பருத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 100 பல்கலை விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

**உரிமம் இன்றி விதை விற்றால் நடவடிக்கை**

கொடைக்கானல்:விற்பனை உரிமம் பெறாமல் விதை விற்பனை செய்வோர் பற்றி நடவடிக்கை எடுக்கடுப்பட உள்ளது. இது குறித்து தோட்டக்கலைத்துறைஉதவி இயக்குனர் கி÷ஷார் கூறியதாவது: கொடைக்கானலில் பழமரக்கன்றுகள்மற்றும் காய் கறி நாற்றுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை விற்பனை செய்வோர், விதை விற் பனை உரிமம் பெற்றிருக்கவேண்டும். விதை விபர அட்டை எண், பயிர் ரகம், குவியல் எண், பரிசோதனை நாள் காலக் கெடு, இனத் தூய்மை, முளைப் புத்திறன், புறத் தூய்மை, நிகர எடை, உற்பத்தியாளர் பெயர் மற்றும் விபரம் உள்ளிட்ட அனைத்து விபரங்களை விபர அட்டையில் குறிப்பிட்டிருக்கவேண்டும். இவற்றில் எந்தஒரு மாற்றமோ, விபரங்கள் விடுபட்டிருப்பது குறித்த புகார்களை விவசாயிகள் நேரில் அலுவகலத்திலோ, மொபைல் எண்.94421 06453 எண்ணில் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**பருத்திச் செடியில் புதிய மாவுப்பூச்சி**

மதுரை:பருத்தி சாகுபடியில் புதிய வகை மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை குறித்து, விநாயகபுரம் நீர்மேலாண்மை பயிற்சி நிலைய துணை இயக்குனர் காதிரி தெரிவித்துள்ளார்.பருத்தி சாகுபடியில் தத்துப்பூச்சியும், காய்ப்புழுக்களும் பெரும் பிரச்னையாக உள்ளன. சமீபகாலமாக பருத்தி வெடிக்கும் காலத்தில் 'ஆபே சாக்கஸ்' என்ற மாவுப்பூச்சி தாக்குதல் அதிகமாக உள்ளது.

புதிதாக 'பினாக்காக்டஸ் சொலிளோப்ஸிஸ்' என்ற புதிய மாவுப்பூச்சிகள், இளம்பருவ பருத்தி செடிகளை தாக்கிவருகின்றன.இப்பூச்சி தாக்கப்பட்ட பயிர்களின் வளர்ச்சி குன்றி, வாடி காய்ந்துவிடும். சிலசமயங்களில் இலைகள், காய்கள் உதிர்ந்துவிடும். இவை எளிதில் காற்றில் பரவும். இதனால் பாதிக்கப்பட்ட செடிகளை ஓட்டை இல்லாத உரச் சாக்கில் எடுத்துச் சென்று அழிக்க வேண்டும்.

ஒருலிட்டர் தண்ணீரில் மீன்எண்ணெய் சோப் 25 கிராம் கலந்து தெளிக்கலாம். பத்து நாட்கள் கழித்து, ஒருலிட்டர் தண்ணீரில் மெத்தில் பாரதியான் மூன்று மில்லி அல்லது ஐந்து மில்லி குளோர்பைரிபாஸ் கலந்து கைத்தெளிப்பான் மூலம், பயிர்கள் நனையும் வரை தெளிக்க வேண்டும். இம்முறையின் மூலம் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தலாம், எனத் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

ராமநாதபுரம்:விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 28ல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும். விவசாயிகள் விசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று விவசாயம் தொடர்பான பொருள் கள் குறித்து விவாதிக்கலாம் என கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள் ளார்.

**சுரண்டை நொங்குகளுக்கு தூத்துக்குடியில் கிராக்கி**

தூத்துக்குடி: சுரண்டை பகுதியில் இருந்து கொண்டு வரப்படுகின்ற பதநீர் மற்றும் நொங்குகள் தூத்துக்குடியில் அமோக விற்பனையாகி வருகிறது. இவற்றின் சுவை அதிகமாக இருப்பதால் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. கோடை வெயில் தொடங்கியது முதல் குளிர்பான பொருட்களின் விற்பனையும் சூடுபிடிக்கத் தொடங்கியது. கோடை வெயில் சூட்டினை தவிர்த்துக் கொள்ள பொதுமக்கள் பழரசம், தர்பூசணி, பழஜூஸ், கம்மங்கூழ், வெள்ளரிக்காய், இளநீர் போன்ற குளிர்பானங்களை அதிக அளவில் பருகி வருகின்றனர். இளநீர், பதநீர், நொங்கு போன்ற இயற்கை பானங்களை பருகுவதால் உடம்பிற்கு இயற்கையாகவே குளிர்ச்சி ஏற்படுவதுடன், உடலுக்கு தேவையான சில சத்துக்களும் கிடைக்கிறது.

இதனால் இந்த இயற்கை பானங்களுக்கு பொதுமக்கள் மத்தியில் என்றுமே தனி மவுசு உண்டு. இருப்பினும் பதநீர், இளநீர் போன்ற பொருட்களின் உற்பத்தி தற்போது வெகுவாக குறைந்து கொண்டே வருகிறது. விவசாய நிலங்கள் எல்லாம் பிளாட்டுகளாக மாறி வருவதால் ஏராளமான பனைமரங்களும், தென்னை மரங்களும் வெட்டி சாய்க்கப்படுகின்றன.

இது தவிர தற்போது தென்னை மற்றும் பனை மரம் ஏறும் தொழில் தெரிந்தவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. வயதான ஒரு சிலர் மட்டுமே வேறு தொழில் தெரியாத காரணத்தால் இந்த தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். தென்னை மரத்தில் ஏறுவதைவிட பனை மரத்தில் ஏறுவதும் மிகவும் சிரமமானதாகும். இதன் காரணமாகவே பலர் பனைஏறும் தொழிலை விட்டு விட்டு வேறு தொழிலுக்கு சென்று வருகின்றனர். இதனால் பனைத் தொழிலுக்கு பெயர் பெற்ற தென்மாவட்டங்களில் பல பனை மரங்கள் செதுக்கப்படாமல் அப்படியே பராமரிப்பு இன்றி காணப்படுகிறது.

ஒரு சில இடங்களில் மட்டும் தான் பனைமரம் ஏறும் தொழில் நடந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சுரண்டை பகுதியை சுற்றிலும் பனை ஏறும் தொழில் இன்னும் நல்ல முறையில் நடந்து வருகிறது. சுரண்டையைச் சுற்றியுள்ள அருணாசலபுரம், கடையாலுருட்டி, சேர்ந்தமரம், அரியநாயகிபுரம், பாண்டியாபுரம் போன்ற இடங்களில் பதநீர் இறக்கும் தொழில் இன்றும் நல்ல முறையில் நடந்து வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பதநீர் மற்றும் நொங்குகள் தற்போது பல கிமீ தொலைவிற்கு அப்பால் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் பதநீர், நொங்குகள் வேன்கள் மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவில்பட்டி, சங்கரன்கோவில், ராசபாளையம், தென்காசி போன்ற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இந்த பகுதியில் விளையும் நொங்கும், அங்கு உற்பத்தி செய்யப்படும் பதநீரும் மிகவும் சுவை அதிகமாக இருக்கும். சுரண்டை பகுதியில் இருந்து தூத்துக்குடிக்கு தினசரி வேன் மூலம் 25க்கும் மேற்பட்டவர்கள் பதநீர் மற்றும் நொங்குகளை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இவை சுவை அதிகமாக இருப்பதால் தூத்துக்குடி பகுதி மக்களும் இவற்றிக்கு அமோக ஆதரவு அளித்து வாங்கி சுவைத்து வருகின்றனர்.

**தென்காசி பகுதியில் நெல் விதை வினியோகம்: வேளாண் அதிகாரி தகவல்**

---

தென்காசி: தென்காசி வட்டார பகுதியில் நெல் விதை வினியோகம் செய்யப்படுகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்காசி வட்டாரத்தில் முக்கிய உணவு பயிரான நெல் பயிர் ஆண்டு தோறும் சுமார் 5 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கார் பருவத்தில் 2 ஆயிரத்து 400 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தென்மேற்கு பருவ மழை துவங்குவதற்கு அறிகுறிகள் தென்படும் இந்த நேரத்தில் விவசாயிகள் கார் பருவ நெல் பயிர் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். கார் பருவத்தில் இவ்வட்டாரத்திற்கு ஏற்ற அம்பை 16, ஐ.ஆர்-50, ஆடுதுறை-45 உள்ளிட்ட குறுகிய கால ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்யலாம்.

சான்று பெற்ற விதைகள்: விவசாயிகள் சான்று பெற்ற நல்ல தரமான அதிக முளைப்பு திறன் கொண்ட நெல் விதைகளை பயன்படுத்த வேண்டும். வடகரை மேல்பிடாகை பகுதியில் சாகுபடி செய்யப்படும் கார் பருவ நெல் பயிர் அறுவடை நேரத்தில் குலைய நோய் தாக்குதலில் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. இதனால் குலைய நோய்க்கு எதிர்ப்புடைய ரகங்களை தேர்வு செய்து சாகுபடி செய்ய வேண்டும்.

கோ-47 குலைய நோய் எதிர்ப்புடைய நெல் ரகமாகும். சான்று பெற்ற நெல் விதைகள் தென்காசி வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டு தற்போது விவசாயிகளுக்கு மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அம்பை-16, ஐ.ஆர்.-50, ஆடுதுறை-43, ஆடுதுறை-45 ரக விதைகள் இம்மையத்தில் விவசாயிகள் வாங்கி பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

ஜிங் சல்பேட், நெல் நுண்ணுரக்கலவை: தென்காசி வட்டாரத்தில் காசிமேஜர்புரம், குற்றாலம், நாகல்காடு, குன்னத்தூர், தென்காசி, பாட்டப்பத்து, மேலகரம், இலஞ்சி, பண்பொழி, வடகரை மேல்பிடாகை, கீழ்பிடாகை, கீழப்புலியூர் உள்ளிட்ட பகுதிகளில் இரண்டு போகங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் தொடர்ந்து தீவிர சாகுபடி நடப்பதால் மண் பரிசோதனை செய்து வேளாண்மை துறையினரால் அளிக்கப்படும் மண் வள அட்டையை பெற்று அதன்படி மண்வளத்தை பராமரிக்க வேண்டும். மேலும் இப்பகுதிகளில் மண்ணில் நுண்ணூட்ட சத்து குறைபாடு இருப்பதால் நெல் பயிருக்கு அடியுரமாக ஏக்கருக்கு 10 கிலோ ஜிங் சல்பேட் உரம் இட வேண்டும். தென்காசி வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஜிங் சல்பேட் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது. இது தவிர்த்து நெல் நுண்ணுரக்கலவை ஏக்கருக்கு 5 கிலோ இட வேண்டும்.

உயிர் உரங்கள்: நெல் பயிரில் ஒருங்கிணைந்த முறையில் உர நிர்வாகம் செய்வதால், மண் வளம் பேணப்படுகிறது. இயற்கை சூழல் மாசுபடாமல் அதிக மகசூலும் கிடைக்கிறது. இந்த முறையில் உர நிர்வாகம் செய்வதில் உயிர் உரங்கள் முக்கிய பங்காற்றுகிறது. நெல் பயிருக்கு அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா என்ற இரு உயிர் உரங்களை இட வேண்டும். இவற்றில் நெல் பயிரில் சிறப்பான பலன் தரக்கூடிய அசோஸ் பைரில்லம் இனம் வேளாண்மை துறையினரால் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. அசோஸ் பைரில்லம் வளி மண்டல தழைச்சத்தை கிரகித்து நெல் பயிருக்கு அளிக்கிறது. பாஸ்போ6 பாக்டீரியா உரமானது மண்ணில் நீரில் கரையாத படிவாக பயிர் வேரால் எடுத்து கொள்ள முடியாத நிலையில் இருக்கும் மணிச்சத்தையும், கரையும் நிலைக்கு கொண்டு வந்து பயிருக்கு கிடைக்க செய்கிறது. இந்த உயிர் உரங்களை இடுவதன் மூலம் 25 சத தழைச்சத்தையும், மணிச்சத்தையும் மிச்சப்படுத்தலாம்.

உயிர் உரங்களை இடும் முறை: அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை விதை நேர்த்தி செய்ய ஒரு ஏக்கருக்கு தேவையான விதைக்கு தலா இரண்டு பாக்கெட்டுகளும், நாற்றுகளின் வேரை நனைத்து

நடுவதற்கு தலா இரண்டு பாக்கெட்டுகளும் தேவை. நடவு வயலில் மண் மற்றும் மக்கிய குப்பையுடன் கலந்து தூவி இடுவதற்கு தலா நான்கு பாக்கெட்டுகளும் தேவை. மொத்தமாக அசோஸ் பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா தலா எட்டு பாக்கெட்டுகள் தேவை. இந்த உயர் உரங்கள் தென்காசி வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் ஜரிஷ்சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

**பருத்தி விதைப் பண்ணைகளை விதைச்சான்று அதிகாரி ஆய்வு**

திருநெல்வேலி: சென்னிகுளம் பகுதியில் பருத்தி விதைப் பண்ணைகளை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் பிரமநாயகம் ஆய்வு செய்தார். சங்கரன்கோவில் தாலுகா சென்னிகுளம் பகுதியில் 2 ஏக்கர் எஸ்.வி.வி.ஆர். 2 பருத்தி விதைப் பண்ணைகளை நெல்லை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் பிரமநாயகம் மற்றும் விதைச்சான்று அலுவலர் நல்லமுத்துராஜா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

உதவி இயக்குநர் பிரமநாயகம் பருத்தி விதை உற்பத்தியாளரிடம் கூறும் போது, சான்று அட்டைகளுடன் பெறப்பட்ட வல்லுனர் மற்றும் ஆதார விதைகளை பயன்படுத்தி விதைப்பண்ணை அமைக்க வேண்டும். பருத்தி பயிரில் அயல் மகரந்த சேர்க்கை நடக்கும் தன்மை இருப்பதால் பருத்தி விதையின் இனத்தூய்மை கெட்டு விடவாய்ப்பு உள்ளது. எனவே பருத்தி விதைப் பண்ணைகளுக்கு பயிர் விலகு தூரம் மிகவும் அவசியம்.

அதாவது பருத்தி ஆதார விதை உற்பத்தி பண்ணைக்கு 50 மீட்டரும், சான்று விதை உற்பத்தி பண்ணைக்கு 30 மீட்டரும் பயிர் விலகு தூரம் இருக்குமாறு அமைக்க வேண்டும். பருத்தி விதை உற்பத்தி செய்யும் ரகங்களின் சிறப்பு மற்றும் வெளித்தோற்ற குணாதிசயங்களை நன்கு தெரிந்து கொண்டு பருத்தி பயரின் வளர்ச்சி பருவம், பூக்கும் பருவம், காய் பிடிக்கும் பருவங்களில் வயல்களை தொடர்ந்து கண்காணித்து கலவன் பயிர்களை அப்புறப்படுத்த வேண்டும்.

பருத்தியில் விதைகளின் வளர்ச்சி, காய்களின் முதிர்ச்சியை பொறுத்து அமைகின்றது. எனவே ஒரு ஏக்கருக்கு 40:20:20 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து உரங்கள் இடவேண்டும். இதில் தழைச்சத்தை மட்டும் முதல் பாதியை அடியுரமாகவும், இரண்டாம் பாதியை இரண்டாக பிரித்து முறையே 45 மற்றும் 60 நாளில் நன்கு களை எடுத்த பிறகு இட்டு மண் அனைத்து நீர் பாய்ச்ச வேண்டும்.

பருத்தியில் காய் தோன்றி முதிர்ச்சி அடையும் தருணத்தில் மட்டும் 2 சதவீத டி.ஏ.பி. கரைசல் கைத்தொளிப்பான் கொண்டு மாலை வேளையில் 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறை காய்கள் வெடிக்கும் முன் தெளிப்பதால் பருத்தி விதைகளில் உள்ள கரு நன்கு வளர்ச்சி பெற்று நல்ல திரட்சியான தரமான விதைகளை பெறலாம். இவ்வாறு தரமான பருத்தி விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி பன்மடங்கு லாபம் பெற அனைத்து பருத்தி விதை உற்பத்தியாளர் முன்வர வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். ஆய்வின்போது சங்கரன்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் காசிம், உதவி விதை அலுவலர் ரவிசந்திரன் உடனிருந்தனர்.

**பயிர் காப்பீடு நிலுவைத்தொகை ரூ.6.40 கோடி வழங்கும் பணி**

திருத்துறைப்பூண்டி: விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு நிலுவைத்தொகை வழங்கும் பணி திருத்துறைப்பூண்டி தாலுகாவில் உள்ள வேளாண் கூட்டுறவு வங்கிகளில் துவங்கியது. திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தாலுகாவில் கடந்தாண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயிர் காப்பீட்டுத்தொகை பெற கடன் வாங்கிய மூன்றாயிரத்து 742 பேருக்கும், கடன் பெறாத 27 ஆயிரத்து 395 விவசாயிகளும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பதிவு செய்திருந்தனர்.

இதில், வங்கியில் கடன் பெற்ற மூன்றாயிரத்து 742 விவசாயிகளுக்கு 3.54 கோடி ரூபாயும், கடன் பெறாத 27 ஆயிரத்து 395 விவசாயிகளுக்கு 58.11 கோடியும் பயிர் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் என அரசு அறிவித்தது.

இதில், மாநில அரசின் பங்கான 50 சதவீத பயிர் காப்பீட்டுத்தொகையான 29.05 கோடி ரூபாயும், மத்திய அரசு நிதியான ரூ.29.05 கோடி ரூபாயும் விவசாயிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. மத்திய அரசு பங்கான பயிர் காப்பீட்டுத்தொகை வழங்கப்படாமல் இருந்ததாலும், இத்தொகையை வழங்க வலியுறுத்தி பல அரசியல் கட்சிகள், விவசாய சங்கங்கள் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.

மத்திய அரசு இத்தொகை வழங்க கோரி தமிழக அரசு வலியுறுத்தி வந்தது. இந்நிலையில், திருத்துறைப்பூண்டி தாலுகாவுக்கு வழங்கப்பட வேண்டிய மத்திய அரசின் நிலுவைத் தொகை, நிலுவையில் இருந்த கடன் பெற்ற விவசாயிகளுக்கு 58 லட்சம், கடன் பெறாத விவசாயிகளுக்கு 5.81 கோடி ரூபாயும் சேர்ந்து 6.40 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டுத்தொகை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் திருத்துறைப்பூண்டி கிளைக்கு வந்தது. விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு நிலுவைத்தொகை வழங்கும் 26 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**விவசாயிகளுக்கு பரன்மேல் ஆடு வளர்ப்பு முறை அறிமுகம் : வேளாண் அறிவியல் நிலையத்தினரின் புதிய முயற்சி**

திண்டிவனம் : திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் 'பரன் மேல் ஆடு வளர்ப்பு முறையில்' உயர்ரக ஆடுகள் மற்றும் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகிறது. இவை மாவட்டத் தில் உள்ள  விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.நாட்டின் முதுகெலும் பான விவசாயிகள் விவசாயத்தை மட்டுமே நம்பி இல்லாமல் பிற தொழில் கள் மூலம் தங்கள் குடும்ப வருமானத்தை பெருக்கி கொள்ள முயற்சிக்க வேண் டும். இதன்படி விவசாயிகள் பொருளாதார உயர்வுபெறும் வகையில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.திண்டிவனத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் விவசாயிகளுக்கு குறுகிய காலத் தில் அதிக வருமானம் ஈட்டும் வகையில் புதிதாக பல்வேறு செயல் முறை விளக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டுகிறது.

தோட்டக்கலை பயிர் கள் உற்பத்திக்காக நிழல் வலைக் குடில்கள் அமைக் கப்பட்டுள்ளது. இதில் தோட்டப்பயிர் நாற்றுகள், ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வருகிறது.  இதன் மூலம் விவசாயிகள் தங்கள் தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம்.விழுப்புரம் மாவட்டத் தில் 1 லட்சத்து 8 ஆயிரம் ஆடுகள் மேய்ச்சல் முறையில் வளர்க்கப்படுகிறது. கால்நடைகளை வளர்க்க பரந்த மேய்ச்சல் நிலம் தேவைப்படுகிறது. கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் பல மடங்கு சுருங்கிவிட்டது. இதனை கருத்தில் கொண்டு ஒரு குறுகிய மேய்ச்சல் நிலத்தில் 'பரன்மேல் ஆடு வளர்ப்பு' முறையில் ஆட் டுப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை அமைக் கும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கு உயர் ரக ஆடுகள் மற்றும் கோழிகள் வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலம் குறைந்த விலையில் விற் பனை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான மாதிரிப் பண்ணை திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலை யத்தில் அமைக்கப் பட்டுள் ளது. 'பரன்மேல் ஆடு வளர்ப்பு'  குறித்து விழுப் புரம் மாவட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து தங்கள் நிலத்தில் குறுகிய இடத்தில்

ஆட்டுப் பண்ணை அமைக்க பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.இந்த முறையில் நாட்டு ஆடுகள் மற்றும் உயர் இன ரகங்களான கேரள மாநிலத்தின் 'தலச்சேரி' தென் ஆப்ரிக்கா நாட்டின் 'போயர் கிராஸ்' ஆகிய உயர்ரக ஆடுகள் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலை யத்தில் தற்போது வளர்க் கப்படுகின்றன. இந்த ஆடுகளை ஒரு ஆண் டில் இனப்பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற் கொள் ளப்பட்டு வருகிறது.

**நெல் மூட்டைகள் மழையில் நனைந்ததால் சாலை மறியல் : செஞ்சி கமிட்டியில் தொடரும் அவலம்**

செஞ்சி : செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், விவசாயிகளின் நெல் மூட்டைகள், வழக்கம் போல் மழையில் நனைந்தன. இதனால், நெல் விலை குறைந்ததால், விவசாயிகள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு, நேற்று 5,000 நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. முந்தைய நாள் அதிகமாக வந்த 6,000 மூட்டைகளும், நேற்று விற்பனைக்கு வந்த 5,000 மூட்டைகளில், 2 000 மூட்டைகள் மட்டும் சேர்த்து 8,000 நெல் மூட்டைகளை நேற்று ஏலத்தில் அனுமதித்தனர். இந்த மூட்டைகளை திறந்த வெளி களத்தில் வைத்திருந்தனர்.

நேற்று அதிகாலை 5 மணி முதல் செஞ்சியில் பெய்த தொடர் மழையில் திறந்த வெளி களத்தில் இருந்த நெல் மூட்டைகள் நனைந்தன. இதனால், முத்தைய நாளை விட மூட்டை ஒன்றுக்கு 200 ரூபாய் வரை விலை குறைந்தது.இதில் ஆத்திரமடைந்த விவசாயிகள், பகல் 12.45 மணிக்கு ஒழுங்குமுறை விற்பனை கூடம் எதிரில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த வழியாக வந்த வாகனங்களை போலீசார் மாற்று வழியில் திருப்பி அனுப்பினர்.சாலை மறியல் செய்த விவசாயிகளை விற்பனை கூட கண்காணிப்பாளர் சிவநேசன், சமாதானம் செய்ய முயன்றார். ஏற்க மறுத்த விவசாயிகள், தொடர்ந்து மறியலில் ஈடுபட்டனர். மதியம் 2 மணிக்கு செஞ்சி டி.எஸ்.பி., ராஜேந்திரன், விவசாயிகளை கமிட்டியின் உள்ளே அழைத்து சென்று சமாதானம் செய்தார்.திருவம்பட்டு விவசாயி ஏழுமலை கூறுகையில், 'நேற்று முன்தினம் பொன்னி நெல்லுக்கு 950 ரூபாய் விலை போவதாக, எங்கள் ஊர் விவசாயிகள் கூறினர். எனவே, இன்று விற்பனைக்கு 47 மூட்டை பொன்னி நெல் கொண்டு வந்ததேன்.

மழையில் நனைந்ததால், 629 ரூபாய் விலை போய் உள்ளது.'குடோன்களில் வியாபாரிகளின் நெல் மூட்டைகளை வைத்து விட்டு விவசாயிகளின் மூட்டைகளை அதிகாரிகள் நனைய விட்டதால், எனக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது' என்றார்.ஒவ்வொரு முறை மழையின் போதும், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் பாதிக்கப்படுவது தொடர்கதையாகி உள்ளது. இங்கு ஏலம் விடுவதற்கு, போதிய அளவு மேற்கூரை உள்ள குடோன்கள் இருந்தாலும், சில வியாபாரிகள் மாதக்கணக்கில் அரசுக்கு எந்த வாடகையும் கொடுக்காமல் மூட்டைகளை அடுக்கி வைத்துள்ளனர்.இதனால் மழையின் போது உடனே குடோன்களை காலி செய்து, அதில் மூட்டைகளை வைத்து ஏலம் நடத்த முடியாத நிலை உள்ளது. இது குறித்து பலமுறை விவசாய சங்கத்தினர் அரசுக்கு புகார் தெரிவித்து வருகின்றனர்.

இருந்தும் ஒழுங்குமுறை விற்பனை கூட அதிகாரிகள் தொடர்ந்து அலட்சியம் செய்து வருகின்றனர். இவர்களின் அலட்சியத்தால், இந்த முறையும் விவசாயிகளுக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, எந்த அரசும் நிறைவேற்றவில்லை. இதே நிலை நீடித்தால் செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு நெல் வரத்து குறைந்து தமிழகத்திலேயே அதிகம் நெல் வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடம் என்ற பெருமையை இழக்கும் அபாயம் ஏற்படும்.

**நெல் அறுவடை பணிகள் தீவிரம்**

விழுப்புரம் : விழுப்புரம் பகுதியில் குறுவை சாகுபடியில் பயிர் செய்திருந்த நெல் அறுவடை பணி வேகமாக நடந்து வருகிறது.விழுப்புரம் மாவட் டத்தில் பல்வேறு பகுதிகளில் பயிர் செய்யப்பட்டிருந்த குறுவை நெல் சாகுபடியில் பயிர் செய்யப்பட்டிருந்த ஏ.டி.டி. 37., ஏ.டி.டி. 39 ஆகிய நெல் ரகங்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இவற்றை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.தற்போது கிராமப்புறங்களில் தேசிய ஊரக வேலைவாயப்பு திட்டத் தில் பரவலாக பணிகள் நடப்பதால் நெல் அறுவடைக்கு போதிய ஆட்கள் கிடைக்கவில்லை. மேலும் ஆட்களுக்கான கூலியும் உயர்ந்துள்ளது. இதனால் கூடுதல் செலவை குறைக் கவும், குறுகிய நேரத்தில் அறுவடை பணியை முடிக் கவும் இயந்திரங்களை கொண்டு நெல் அறுவடையை செய்து வருகின்றனர்.

---

***ஏப்ரல் மாதத்தில் முந்திரி ஏற்றுமதி 7.4 சதவீதம் சரிவு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொச்சி*
*நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி 7.4 சதவீதம் சரிவடைந்து7,802 டன்னாக குறைந்துள்ளது. ரூபாய் மதிப்பின் அடிப்படையிலும் ஏற்றுமதி 6.2 சதவீதம் குறைந்து ரூ.210 கோடியாக சரிந்துள்ளது.*

*எனினும் டாலர் மதிப்பு அடிப்படையில் முந்திரி ஏற்றுமதி ஓரளவு உயர்ந்து 4.71 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 4.46 கோடி டாலராக இருந்தது. நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ஏற்றுமதிக்கான ஒரு கிலோ முந்திரியின் மதிப்பு ரூ.269–ஆக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் ரூ.265–ஆக இருந்தது.*

***கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 10 சதவீதம் உயர்வு தென்கிழக்கு ஆசியாவில் தேவை அதிகரிப்பு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொச்சி*
*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 10 சதவீதம் உயர்ந்து 6.64 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்பின் அடிப்படையில் இப்பொருள்களின் ஏற்றுமதி 15 சதவீதம் வளர்ச்சி கண்டு, ரூ.9,921 கோடியாக உயர்ந்துள்ளது.*
*பாரம்பரிய சந்தைகள்*

*கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் சென்ற நிதி ஆண்டுக்கான*

*கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி குறித்த புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. சென்ற நிதி ஆண்டில், தென் கிழக்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இந்தியாவின் கடல் உணவு பொருள்களுக்கு இந்த நாடுகளில் வரவேற்பு அதிகரித்து வருவதாக இவ்வாணையம் தெரிவித்துள்ளது.*

*சென்ற நிதி ஆண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 62 சதவீதம் உயர்ந்து 1.44 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. மேலும் ரூபாய் மதிப்பில் 66 சதவீதமும், டாலர் மதிப்பில் 61 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது.*

*2008–09–ஆம் நிதி ஆண்டில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 34,526 டன்னாக இருந்தது. இது, சென்ற நிதி ஆண்டில் 27.04 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் மதிப்பு ரூ.554.49 கோடியாகும். ஏற்றுமதி, ரூபாய் மதிப்பில் 17 சதவீதமும், டாலர் மதிப்பில் 11.47 சதவீதமும் உயர்ந்துள்ளது.*

*ஐரோப்பா*

*எனினும் சென்ற ஆண்டில், ஐரோப்பாவின் பங்களிப்பு 24.7 சதவீதம் என்ற அளவில் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாண்டில் ஐரோப்பிய நாடுகளுக்கு 200 கோடி டாலருக்கு (சுமார் ரூ.9,000 கோடி) மேல் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. சீனாவின் பங்களிப்பு 21 சதவீதமாகவும், ஜப்பானின் பங்களிப்பு 8.7 சதவீதமாகவும் உள்ளது.*

*சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மிகப் பெரிய இறக்குமதியாளராக இருந்த அமெரிக்காவின் பங்களிப்பு, சென்ற நிதி ஆண்டில், அளவின் அடிப்படையில் 5 சதவீதமாக சரிவடைந்துள்ளது. நம் நாட்டின் சில வகை இறால்களுக்கு அமெரிக்காவில் பொருள் குவிப்பு வரி விதிக்கப்பட்டது. இதன் காரணமாகவே அந்நாட்டிற்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி குறைந்து போனது.*

*கடந்த 2004–05–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ரூ.426 கோடி மதிப்பிற்கு கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி ஆகியுள்ளன. இது, சென்ற நிதி ஆண்டில் ரூ.211 கோடியாக சரிவடைந்துள்ளது. இதே ஆண்டுகளில், அளவின் அடிப்படையில் இப்பொருள்கள் ஏற்றுமதி 66,000 டன்னிலிருந்து 33,000 டன்னாக குறைந்துள்ளது.*

# வேளாண்மை செய்திகள்

### லட்சக்கணக்கில் லாபம் தரும்

## பச்சவுலி வாசனைப்பயிர் சாகுபடி



உணவிற்காக விவசாயம் என்ற நிலைமாறி, வணிக ரீதியாக மாற்றம் கண்டு வருகிறது. மருத்துவ பயிர், வாசனைப்பயிர், எழிலூட்டும் பயிர் என விவசாயம் விரிவடைந்துள்ளது. வாசனைப் பயிர்களில் அதிக மதிப்புடையது பச்சவுலி. இதன் இலைகளில் கோயாரிலியுன் என்ற வாசனை எண்ணெய் உள்ளது. இந்த வாசனை திரவியத்துக்கு சர்வதேச சந்தையில் நல்ல மதிப்பு உள்ளது.

### பச்சவுலி சாகுபடி

லாவண்டர், ஜாஸ்மின், லில்லி போன்ற வாசனை பயிர்களை போல பச்சவுலி வாசனைப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. செடிகள் 2 முதல் 3 அடி வரை வளரும் தன்மையுடையது. பெங்களூர், கோவை, கோபி, கல்லாறு, கீழ்பவானி, பர்லியாறு, கன்யாகுமரி போன்ற பகுதிகளில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

இந்த பயிர் சர்வதேச அளவில் வாசனை திரவியங்கள் தயாரிக்க பயன்படுகிறது. வாசனை திரவியத்துக்கு தேவையான நிறம், வாசனைத் தன்மை இதில் உள்ளது. இதன்மூலம் சோப்பு, கிரீம், ஷாம்பூ போன்ற வாசனை பொருட்களை தயாரிக்க முடியும். பசியின்மை, தூக்கமின்மை போன்ற நோய்களை குணப்படுத்த பச்சவுலி எண்ணெய் பயன்படுகிறது. மேலும், பூச்சி மற்றும் பாம்பு போன்ற விஷக்கடிக்கு மருந்தாக பயன்படுகிறது.

### மகசூல் கிடைக்கும்

பச்சவுலி வளமான மண் வகைகளில் பயிரிட ஏற்றது. மண்ணில் அமிலத்தன்மை 5.5 முதல் 6.5 வரை இருக்க வேண்டும். நல்ல வடிகால் வசதியுடன் இயற்கை தன்மை இருந்தால் நல்ல மகசூல் கிடைக்கும். குச்சிகள் மூலமாக பச்சவுலி பயிரிடப்படுகிறது. 4 முதல் 5 கணுக்களை கொண்ட 15 முதல் 20 சென்டி மீட்டர் நீளமுள்ள குச்சிகளை 5 சென்டி மீட்டர் இடைவெளியில் நட வேண்டும். 60 நாட்களில் குச்சிகள் துளிர்த்து வேர்ப்பிடிக்கும். ஏக்கருக்கு 11 ஆயிரம் செடிகள் நடலாம்.

ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் மிதமான வெப்ப நிலையில் நிழல் உள்ள இடங்களிலும், தென்னந்தோப்புகளில் ஊடுபயிராகவும் பயிரிடலாம். காற்றில் 75 சதவீதம் ஈரப்பதமும், ஆண்டுதோறும் 150 முதல் 250 சென்டி மீட்டர் மழையளவு இருக்க வேண்டியது அவசியம். முறையான நீர் மற்றும் சொட்டு நீர் பாசனம் அளிப்பது அவசியம்.

### ரூ.1½ லட்சம் வரை லாபம்

ஹெக்டேருக்கு 150 கிலோ தழைச்சத்து மற்றும் மணிச்சத்து, 50 கிலோ சாம்பல் சத்துள்ள உரங்களை பயன்படுத்த வேண்டும். மக்கிய இயற்கை உரங்களை இடுவது நல்லது. பூச்சி மற்றும் நோயை கட்டுப்படுத்த கார்டாப் ஹைட்ரோகுளோரைடு, காப்பர் ஆக்ஸி குளோரைடு, குடோமானஸ் மருந்து வகைகளை தெளிக்கலாம்.

5 முதல் 6 மாதத்தில் அறுவடை செய்யலாம். 4 மாத இடைவெளியிலும் அறுவடை செய்யலாம். 600 முதல் 900 கிலோ உலர்ந்த இலைகள் ஒவ்வொரு ஆண்டும் மகசூலாக கிடைக்கும். இதன் மூலம் ஏக்கருக்கு ரூ.1 முதல் 1½ லட்சம் வரை விவசாயிகள் லாபம் பெறலாம்.

-தகவல்: கபீர், வேளாண் ஆலோசகர், தாராபுரம்.

## அறுவடை செய்த வெங்காயத்தை சேமித்தால் நஷ்டம் ஏற்படலாம்

### விவசாயிகளுக்கு எச்சரிக்கை



நமது நாட்டை பொறுத்தவரை தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களில் மட்டுமே வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாட்டில் கடந்த 2008-09-ம் ஆண்டில் 77 லட்சம் டன் சின்ன மற்றும் பெரிய வெங்காயத்தை 5.54 லட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்தது. வர்த்தக மூல ஆதாரங்களின்படி தமிழ்நாட்டில் 2008-09-ம் ஆண்டில் 30 லட்சம் ஹெக்டேரில் 3 லட்சம் டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த உற்பத்தியில் 80 சதவீதத்துக்கு அதிகமான பங்கு சின்ன வெங்காயத்துக்கு உள்ளது.

### ஏற்றுமதி

மொத்த வெங்காய உற்பத்தியில் (சின்ன மற்றும் பெரிய வெங்காயம் உள்பட) 23 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுவதால் குறைந்த பட்ச விலையை பொறுத்து உள்நாட்டின் ஏற்றுமதி விலை மாறுபடும். கடந்த 2009-ம் ஆண்டில் சின்ன வெங்காயம் கிலோ ஒன்றுக்கு ரூ.22 வரை விற்றது. உள்நாட்டு வரத்தை அதிகரித்து விலையை கட்டுக்குள் வைக்க டிசம்பர் 2009-ல் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை மெட்ரிக் டன்னுக்கு 520 அமெரிக்க டாலராக உயர்த்தப்பட்டது. உயர்ந்த பட்ச ஏற்றுமதி விலை மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து வரத்து அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக உள்நாட்டு வரத்து அதிகரித்து பண்ணை விலை கடந்த ஏப்ரல் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.10 ஆக குறைந்தது.

எனவே விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து விற்பனை செய்வதா என்ற கேள்வியை எழுப்பி உள்ளனர். இதன் பொருட்டு விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் விதத்தில் வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மைய ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக திண்டுக்கல் மற்றும் ஒட்டன்சத்திரத்தில் நிலவி வரும் சந்தை நிலவரத்தை ஆய்வு செய்தது. வர்த்தக மூலங்களின் படி கர்நாடக மாநிலத்தில் இருந்து வரும் வெங்காயத்தின் வரத்து கடந்த ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்து விட்டது. தமிழகத்தை பொறுத்த வரை தை பட்டத்தில் விதைத்த வெங்காய அறுவடை தற்போது தொடங்கி உள்ளது.

### கோடை மழை

தேசிய கூட்டுறவு வேளாண் சந்தையின் கூட்டமைப்பு (நபீட்) கடந்த மாதத்தில் தென் மாநில வெங்காய ரகங்களுக்கான குறைந்த பட்ச ஏற்றுமதி விலையை மெட்ரிக் டன்னுக்கு 415 அமெரிக்க டாலராக குறைத்து உள்ளது. இந்த குறைக்கப்பட்ட குறைந்த பட்ச ஏற்றுமதி விலை மற்றும் தமிழகத்தின் சில இடங்களில் பரவலாக பெய்யும் கோடை மழை ஆகிய காரணங்களால் வெங்காயவிலை ஏறுமுகத்தில் இருக்கும்.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் முடிவின்படி நல்ல தரமான வெங்காயத்தின் விலை இந்த மாதம் மற்றும் ஜூன் மாதத்தில் கிலோவிற்கு ரூ.13 முதல் 15 வரை இருக்கும். சராசரி ரக வெங்காயத்தின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.10 முதல் 12 வரை இருக்கும். நல்ல நிறம் மற்றும் குறைந்த ஈரத்தன்மையுடன் கூடிய பெரிய காய்களை தரமான வெங்காயம் என வர்த்தகர்கள் கருதுகின்றனர். மற்றவை சராசரி தரம் என்று பிரிக்கப்படுகின்றன.

### பண்ணை விலை

அறுவடை சமயத்தில் பல்லடம், திருப்பூர், உடுமலை மற்றும் கோவை பகுதிகளில் மழை பெய்யும் பட்சத்தில் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.15-ஐ தாண்டும் வாய்ப்புகள் உள்ளன. அதிகப்படியான வெப்பம் மற்றும் குறைந்த காற்றோட்டம் காரணமாக தற்போது அறுவடை செய்யும் வெங்காயம் சேமிக்க ஏற்றது அல்ல என்று வர்த்தக மூலங்கள் தெரிவிக்கின்றன. மேலும் சேமிப்பில் 30 சதவீதத்துக்கு மேல் இழப்பு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.

எனவே அறுவடை செய்த வெங்காயத்தை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பனை செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

## அறுவடை செய்த உளுந்தை உடனடியாக விற்பது நல்லது

### வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

இந்தியாவில் உற்பத்தியாகும் பயிறு வகைகளில் முக்கியமானது உளுந்து. சர்வதேச அளவில் உளுந்து உற்பத்தியில் இந்தியா முதல் இடம் வகிக்கிறது. அதை தொடர்ந்து மியான்மர் மற்றும் தாய்லாந்து நாடுகள் உள்ளன.

நமது நாட்டை தவிர சீனா, பாகிஸ்தான் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உளுந்தை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன. மியான்மர், சிங்கப்பூர், தாய்லாந்து, நியூசிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உளுந்து பயிரை அதிக அளவில் ஏற்றுமதி செய்கின்றன.

### 2 மில்லியன் ஹெக்டேர்

நமது நாட்டில் ஆண்டுக்கு சுமார் 2 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் 1 மில்லியன் டன்கள் வரை உளுந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஆந்திரா, தமிழ்நாடு, குஜராத், உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்கள் உளுந்தை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் ஆடிப்பட்டம் (ஜூன்-ஆகஸ்ட்), புரட்டாசி பட்டம் (செப்டம்பர்-நவம்பர்), தைப்பட்டமான (ஜனவரி- பிப்ரவரி), மற்றும் கோடை கால பருவம் (மார்ச்-ஏப்ரல்) ஆகிய மாதங்களில் உளுந்து அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் கடந்த 2007-08-ம் ஆண்டுகளில் 3 லட்சம் ஹெக்டேரில் உளுந்து பயிரிடப்பட்டு 1 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை தஞ்சாவூர், கும்பகோணம், நெல்லை மற்றும் கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் உளுந்து அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தஞ்சாவூர், விருதுநகர், மதுரை, சேலம், மற்றும் சென்னை ஆகிய பகுதிகள் உளுந்து வர்த்தகத்தில் அதிகமாக ஈடுபடும் பகுதிகளாகும். ஜனவரி மாதம் முதல் உளுந்து சந்தைக்கு வரத்தொடங்கி உள்ளது. இருந்த போதிலும் கடந்த இரண்டு மாதங்களாகத்தான் தமிழ்நாட்டில் உளுந்து வரத்து அதிகமாக இருக்கிறது. சாகுபடி காலத்தில் போதுமான அளவு மழை இல்லாததால் இந்த ஆண்டு கடந்த மாதம் முதல் வாரத்தில் இருந்து உளுந்து வரத்து தொடங்கி வருகிற ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஏற்றத்தாழ்வு

கடந்த 2 மாதங்களாக பருப்பு விலையில் அதிக ஏற்றத்தாழ்வு நிலவி வருவதால் அறுவடை செய்த உளுந்தை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து விற்பதா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்து உள்ளது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விடை அளிக்கும் விதத்தில் வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 10 ஆண்டுகளாக விழுப்புரம் மற்றும் விருதுநகரில் நிலவிய சந்தை நிலவரத்தை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின் படி உளுந்தின் விலை இந்த மாதம் முதல் ஜூலை மாதம் வரை ரூ.4 ஆயிரத்து 600 முதல் ரூ.5 ஆயிரத்து 200 ஆக இருக்கும் என தெரிய வந்து உள்ளது.

எனவே அறுவடை செய்த உளுந்தை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்கும்படி விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.